**கோமரங்கடவல பிரதேச சபை**

**திருகோணமலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆகஸ்ட் 21 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 02 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கோமரங்கடவல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் பெறுமதியானது ரூபா 1,545,012 ஆனமையால் அது ரூபா 1,665,553 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈட்டத்திற்கான வருமானத்திலான பங்களிப்பு கணக்கின் பெறுமதியானது ரூபா 120,541 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி திணைக்களத்தினால் சபைக்கு வெகுமதியளிக்கப்பட்ட உழவு இயந்திரத்தின் பெறுமதியானது ரூபா 1,209,000 ஆன போதிலும், அது 1,800,000 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈட்டத்திற்கான வருமானத்திலான பங்களிப்பு கணக்கு ரூபா 591,000 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 1,146,275 கூட்டுத்தொகையான இருப்பு விடயங்கள் மற்றும் குப்பைக் கூடைகள் நடைமுறையல்லாத சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்தமையால் நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் மூலதன ஈட்டத்திற்கான வருமானத்திலான பங்களிப்பு கணக்கு அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 2,254,750 தொகை கணக்கு வைக்கப்பட்டிராமையால் வருமானம் அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டிற்குரிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 1,219,077 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) சபையினால் விலைக்கு வாங்கப்பட்டிருந்த ரூபா 31,600 பெறுமதியான புல்வெட்டும் இயந்திரங்கள் 2 மற்றும் அரைக்கும் இயந்திரம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபையின் வார சந்தை மற்றும் சிற்றுண்டிச்சாலையின் நிர்மாண செலவு ரூபா 2,525,752 ஆன போதிலும், ரூபா 2,500,000 என மூலதனமாக்கப்பட்ட காரணமாக நடைமுறையல்லாத சொத்துக்கள் ரூபா 25,751 இனால் குறைவாகக் காட்டப்பட்டது.

### 1.3.2 தகவல்களை கணக்காய்விற்கு முன்வைக்காமை

வைப்புச் சான்றிதழ்களை முன்வைக்காமையால் ரூபா 130,621 ஆன சபையின் வைப்புக்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காமைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) நீதி 217 | உரிய வடிவமைப்பில் குறிப்பிடப்பட்டபடி நிலையான சொத்துக்களுக்கான பதிவேடொன்று பராமரிக்கப்படவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 4 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 7,500 பெறுமதியான நானாவித வைப்புக்களை தீர்ப்பதற்கு அல்லது அரச வருமானத்திற்கு கணக்கு வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,729,746 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,189,451 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 |
| (i) | வாடகை | 1,860 | 1,964 | 1,858 | 106 | 1,321 | 1,812 | 1,694 | 117 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 119 | 130 | 130 | - | 98 | 120 | 120 | - |
| (iii) | ஏனைய வருமானம் | 1,158 | 1,754 | 1,754 | - | 911 | 3,062 | 3,062 | - |

### 2.2.2 வாடகை

சபையினால் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த கடை அறைகள் மற்றும் வாடகை வீடுகளின் மாதாந்த வாடகை வருமானம் ரூபா 1,444 முதல் ரூபா 2,477 இற்கு இடைப்பட்டதாகும். அதற்கடைய அந்த கடை அறைகள் மற்றும் வாடகை வீடுகள் மீண்டும் மதிப்பீடு செய்து நிகழ்காலத்திற்கு பொருத்தக்கூடிய மாதாந்த வாடகையை அறவிடுவது குறித்து சபையின் அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் குறித்து விசாரணை செய்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்தல், மக்களின் சுகவாழ்வு, வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகளை விதிக்க வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபையினால் உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் இலக்கம் 01/2014 இன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்துகொள்ள முடியாமை**

மக்கள் சேவையை விரிவுபடுத்துதல் மற்றும் சபையின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்தில் பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய வேலைத்திட்டம் 2017 இன் கீழ் சபையின் பழைய அலுவலகக் கட்டிடம் ரூபா 2,765,320 செலவு செய்யப்பட்டு 2017 திசெம்பர் 20 ஆந் திகதிக்கு புனர்நிர்மாண பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்தாலும் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடைய 2018 செப்தெம்பர் 07 ஆந் திகதிக்கு கூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை வெளியிடுதல்**

1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23 ‘‘அ’’ பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றாடல் அழிவு ஏற்படும் அரிசி ஆலைகள், தச்சு கைத்தொழில், கராஜ் மற்றும் சீமெந்துடன் தொடர்புடைய உற்பத்தி நிறுவனங்கள் போன்ற முயற்சிகள் நடைமுறைப்படுத்தும் போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் நடைமுறைப்படுத்தப்படும் அவ்வாறான 21 முயற்சிகள் அவ்வாறான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளாது தொழிற்சாலை நடாத்திச் செல்லப்பட்டவாறு இருந்தது. இது தொடர்பில் ஏற்படக்கூடிய கூற்றாடல் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

சபையினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளாக சுத்தமான குடிநீரை சபையின் மக்களுக்கு வழங்குதல் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன், உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான வேலைத்திட்டம் மற்றும் அது தொடர்பான அளவீடுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான மீகஹவத்த பொது கிணறு அமைந்துள்ள இடத்தில் சபையின் அனுமதியின்றி சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் கடையொன்று கட்டப்பட்டு குடிநீர் விநியோகிக்கும் மத்திய நிலையம் ஒன்று நடாத்தப்பட்ட போதிலும் அது குறித்து சபையினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்ய மாகாண மக்கள் பிரதிநிதிக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்களி வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 08 உதவியாளர்களுக்கு ஒருவரிடம் மோட்டார் சைக்கிள் வழங்குவதற்கு அறவிடப்பட்ட ரூபா 362,870 தொகை தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்காமல் 2018 செப்டெம்பர் 04 ஆந் திகதி வரை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(இ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 29 இன் படி நாளாந்தம் சேர்க்கப்படும் முழுப்பணமும் நாளாந்தம் வங்கியில் வைக்கப்படாமல் தாமதமாக வைப்பிலிடப்பட்டுள்ளது. அத்தோடு பணம் வைப்பிலிடும் போது சேர்க்கப்படும் அனைத்து பணமும் வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்காது வைப்பிடும் ஒவ்வொரு

நாளும் ரூபா 6,000 முதல் ரூபா 20,000 வரை கையிருப்பில் வைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) சபையினால் வாடகைக்கு வழங்கப்பட்ட வாகனங்களுக்காக வாடகை வருமான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையில் சேவை செய்யும் தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் 2018 மே மாதம் 28 ஆந் திகதி முதல் குச்சவெளி பிரதேச சபைக்கு இடமாற்றம் செய்யும் போது அவரது பதில் உத்தியோகத்தர் 2018 செப்டெம்பர் 07 ஆந் திகதி வரை சேவைக்கு சமுகமளிக்காமையால் 2018 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்த உத்தேசித்த அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்பார்வை செய்ய முடியாது போயுள்ளது.

(ஆ) 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை இல 30/2008 க்கு அமைய இடர் கடன் வழங்கக்கூடிய அதிகபட்ச தொகை ரூபா 250,000 ஆன போதிலும் அவ்வெல்லையை மீறி உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 264,270 கடன் வழங்கப்பட்டிருந்தது.

(இ) 2015 யூலை 23 ஆந் திகதிய இல 07.ஃ.2015 இன் ஓய்வூதிய சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் ஊழியர்களின் முழு மாத சம்பளத்தில் 20 சதவீதமான பங்களிப்பு தொகையை அறவிடப்பட வேண்டும் என்ற போதிலும் பதிலீட்டு மற்றும் நிரந்தர அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட ஊழியர்கள் மூவரிடம் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பங்களிப்பு தொகையானது குத்தகை அடிப்படை சம்பளத்தில் கணக்கிடப்பட்டிருந்தது. அதனால் தொழில் வழங்குனர் மற்றும் தொழிலாளியின் பங்களிப்பு ரூபா 135,240 இனால் குறைவாக கணிக்கப்பட்டிருந்தது.

(ஈ) i. முகாமைத்துவ உதவியாளர் அதிவிசேட பிரிவின் பதவியொன்றான சபையின் செயலாளர் பதவிக்கு பதிற் கடமை அடிப்படையில் முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தாலும், 2018 செப்டெம்பர் வரையிலும் வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ii. அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் வருமான பரீட்சகர் பதவிகளுக்கு நிலவும் வெற்றிடங்கள் காரணமாக சபையின் நடவடிக்கைகளை முறையான கொண்டு செல்வதில் சிரமங்கள் காணப்பட்டன.

**3.4 செயற்பாட்டு திறமையீனங்கள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) இலங்கை தகவல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் ‘‘ஈ நெசனல’’ வேலைத்திட்டம் சபையின் மக்கள் நூலகமொன்றில் 2014 நவம்பர் 18 ஆந் திகதி ஆரம்பமாகி கணனி, அச்சுப்பொறி, ஸ்கேனர், வெப் கெமரா ஆகிய உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளை மக்களுக்கு பெற்றுத்தருவதற்கு 2018 செப்டெம்பர் வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) உள்ளூராட்சி நிறுவனங்களில் முன் அலுவலகங்களை நிறுவும் வேலைத்திட்டம் 2017 க்கு அமைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் சபையினால் ரூபா 283,998 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டு கணனி மற்றும் உப பாகங்களின் தொகுதிகள் 03 மற்றும் அச்சுப்பொறி ஒன்றும் அமைச்சினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்தாலும் 2018 செப்தெம்பர் வரை அவ்வாறான முன் அலுவலகம் ஒன்று நிறுவப்படவில்லை.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான மதவாச்சி அலுவலகம் 2016 ஒக்டோபர் முதல் உபயோகப்படுத்தாது இருந்ததுடன், அந்த கட்டிடத்தை பயனுள்ள செயற்பாட்டில் ஈடுபடுத்த சபையின் கவனம் செலுத்தப்படவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் போது அகற்றப்பட்ட பழைய நீர் பவுசர் தாங்கி பாவிக்கக்கூடிய நிலையில் இருந்த போதிலும் அதனை ஆக்கவளமுடைய காரியம் குறித்து ஒதுக்காது 2018 செப்டெம்பர் 07 ஆந் திகதி வரையிலும் பாவிக்காத நிலையில் இருந்தது.

(இ) சபைக்கு சொந்தமான மிட்சுபிஷி கெப் வண்டியொன்று 2004 ஆம் ஆண்டு முதல் மற்றும் டிரெக்டர் 2008 ஆம் ஆண்டு முதல் பாவிக்காது ஒதுக்கப்பட்டிருந்தாலும் அவற்றை பழுதுபார்த்து பாவனைக்கு எடுப்பதற்கோ அப்புறப்படுத்துவதற்கோ 2018 செப்டெம்பர் 07 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.5.2 பொருள் மெய்மையாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்குரிய 2018 யூன் மாதம் 22 ஆந் திகதி நடைபெற்ற பொருள் மெய்மையாய்வுக்கு அமைய இனங்காணப்பட்ட பழுதுபார்க்க வேண்டிய, விற்கப்படவேண்டிய மற்றும் அழிக்கப்பட வேண்டிய பொருட்கள் குறித்து முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் 2018 செப்டெம்பர் 07 ஆந் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

(ஆ) பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம் ஆய்வுக்கு முன்வைக்கப்படாத புத்தகங்கள் 25 தொடர்பாக 2018 செப்டெம்பர் 07 ஆந் திகதி வரை உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

## 3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

மதவாச்சியின் கடை அறை இலக்கம் 06 இன் மின்சாரப்பட்டியல்கள் உரிய நேரத்துக்கு செலுத்தப்படாமையால் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் மின் இணைப்பை பெற்றுக்கொள்வதற்கு ரூபா 12,354 கட்டப்பட்டிருந்தது.

## 3.7 பெறுகைகள்

### 3.7.1 பெறுகைகள் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் இலக்கம் 01/2014 இன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7.2 ஒப்பந்த நிர்வாகம்

#### 3.7.2.1 கோமரன்கடவல குடிநீர் செயற்திட்டம்

சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் குடிப்பதற்கு உகந்த நீர் இல்லாத பிரச்சினைக்கு தீர்வாக புறநெகும வேலைத்திட்டத்தின் கீழ் குடிநீர் வேலைத்திட்டம் ஒன்று மூன்று கட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்காக சபையினால் ரூபா 51,571,930 பெறுமதியான ஒப்பந்தங்கள் 03 கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இந்த செயற்திட்டத்தின் நோக்கமானது கோமரன்கடவல பிரதேச செயலாளர் பிரிவிற்கு சொந்தமான கோமரன்கடவல மற்றும் கந்தமாலாவ கிராம சேவகர் பிரிவு இரண்டில் குடியேறியுள்ள 685 குடும்பங்களுக்கு சுகாதாரமான குடிநீர் பெற்றுத்தருவது என்றபோதிலும் நிர்மாணிக்கப்பட்ட கிணற்றில் நீர் கபில நிறமாக காணப்பட்டதுடன் சுத்திகரிக்கும் முறையொன்று வேலைத்திட்டத்திற்கு உள்ளடக்கப்படாமை காரணமாக அந்த நீர் குடிப்பதற்கு உகந்த நிலையில் இல்லாமை.

(ஆ) இந்த செயற்திட்டத்தின் மேற்பார்வை மற்றும் ஆலோசனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையுடன் 2013 மே 13 ஆந் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு அதற்காக ரூபா 2,623,200 செலுத்தப்பட்டுள்ளது. ஆனாலும், முறையாக சாத்தியவள கற்கை நடத்தாது கிணறு கட்டுதல் மற்றும் கிணறு அமைந்துள்ள இடத்தில் இருந்து 1½ கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள இடத்தில் நீர்த்தாங்கி ஒன்றை நிர்மாணிப்பதன் காரணமாக எதிர்பார்த்த குடும்பங்களுக்கு முறையாக குடிநீர் முடியாமல் உள்ளது.

(இ) இந்த செயற்திட்டத்தின் கீழ் மடுகஹவெவ கிராமத்தில் வீடு ஒன்றுக்காக நீர் வழங்கப்பட்டிருந்தாலும் 2018 செப்டெம்பர் 07 ஆந் திகதி நடாத்தப்பட்ட தளப் பரிசோதனையில் அக்கிராமத்தில் மக்களுக்கு நீர் பெற்றுத் தரப்படாததுடன் சரியான நடைமுறையை பின்பற்றி நீர் வசதியை பெற்றுத்தர அவசியமான நடைமுறைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) கிணற்றிலுள்ள நீர் போதாமை மற்றும் சுகாதாரமின்மை காரணமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் ஆலோசனைப்படி இந்த நீர் செயற்திட்டத்தின் நான்காம் கட்டம் என நிலத்தடி நீர் கிணறு ஒன்றை நிர்மாணித்தல் மற்றும் நீர் வழங்கலை பெற்றுத் தருவதற்காக 2016 சனவரி 27 ஆந் திகதி ரூபா 6,986,000 பெறுமதியான ஒப்பந்தம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இதன் கீழ் 325 குடும்பங்களுக்கு நீர் வழங்கல் உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும் என்றாலும், 475 உதிரிப்பாகங்கள் வாங்கப்பட்டமை காரணமாக களஞ்சிய அறையினுள் ரூபா 1,399,380 பெறுமதியான உதிரிப்பாகங்கள் 228 உபயோகிக்கப்படாது இருந்தது.

### 3.7.2.2 கல்கடவல அத்கம் கர்மாந்த வீதிக்கு கொன்கிறீட் இடல்

பிரதேச சபை அபிவிருத்தி கையளிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் கல்கடவல அத்கம் கர்மாந்த வீதிக்கு கொங்கிறீட் இடுவதற்காக 2016 யூலை 30 ஆந் திகதி ரூபா 2,!48,615 பெறுமதியான ஒப்பந்தம் ஒன்று வழங்கப்பட்டு வீதியின் வேலை 2016 செப்தெம்பர் 07 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்தாலும் வீதியின் பல்வேறு இடங்களில் வெடிப்புக்கள் காணப்பட்டன. வெடித்துள்ள இடங்களை ஒப்பந்தக்காரர் மூலம் அமைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்காததுடன் அதற்குரிய கையிருப்பு தொகையான ரூபா 211,365 தொகை 2017 மார்ச் 14 ஆந் திகதி விடுவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இந்த வீதி ஆரம்பிக்கும் இடம் மழை நாட்களில் நீரில் மூழ்குவதால் அவ்விடத்தில் வடிகால் கட்டப்படாமை காரணமாக வீதியின் போக்குவரத்து சிரமமாகி உள்ளது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி இலக்கம் 168(i) படி மார்ச் 31 ஆம் திகதிக்கு முன் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுக்காக முன்வைக்க வேண்டும் என்றாலும் கடந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 ஆகஸ்ட் 21 ஆந் திகதி முன்வைக்கப்பட்டிருந்தது.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 13 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் நிலவின. அதற்கமைய வருடாந்த பாதீடானது சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமையும் கட்டுப்பாடும்

கீழே காண்பிக்கப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட்டிராமை. |
| | (ii) வருமானம் கணக்கு வைக்கப்பட்டிராமை. |
| (ஆ) வருமான நிர்வாகம் | நிலுவை வருமானம் அறவிடப்படாமை. |
| (இ) ஒப்பந்த நிர்வாகம் | (i) ஒப்பந்தங்கள் மதிப்பாய்வு செய்யப்படாமை. |
| | (ii) தாமதித்து நிறைவு செய்தல். |
| (ஈ) மனிதவள முகாமைத்துவம் | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |